www.agaram.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## ஆண்டிறுதிப் பரீட்சை – 2019
## கர்நாடக சங்கீதம்

தரம்: 10 சுட்டெண்:………………………………. நேரம்: 3 மணித்தியாலங்கள்

பகுதி 1

கவனிக்க வேண்டியவை

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிக.

1. பதம் எனும் உருப்படியில் வெளிப்படுத்தப்படும் ரஸம்
   1. கோபம் 2. வீரம் 3. சிருங்காரம் 4. ஹாஸ்யம்

2. பின்வருவனவற்றில் வில்லிசையில் பயன்படுத்தக் கூடிய இசைக்கருவி
   1. தவில் 2. முகர்சிங் 3. தபேலா 4. உடுக்கை

3. தகதகிட என்ற ஜதிச்சொல் குறிக்கும் நடை
   1.கண்டநடை 2. சதுஸ்ரநடை 3. திஸ்ரநடை 4. சங்கீர்ணநடை

4. சங்கராபரண இராகத்தினை குறிக்கம் பண்
   1. பழந்தக்க இராகம் 2. பழம்பஞ்சுரம் 3. இந்தளம் 4. செந்துருத்தி

5. வர்ணம் எனும் உருப்படி
   1. அப்பியாசகானம் 2. சபாகானம் 3. இரண்டிற்கும் பொதுவானது 4. சாமகானம்

6. மத்தியஸ்தாயி தைவதத்திற்கு மேல் சஞ்சாரமில்லாத இராகம்
   1. குறிஞ்சி 2. நாதநாமக்கிரியை 3. நவரோஜ் 4. புன்னாகவராளி

7. தோடி இராகத்தின் இராகச்சாயாஸ்வரங்கள்
   1. ரி, க, ம, த, நி 2. ரி, க, ம 3. ம, த, நி 4. க, ம, த

8. ஸாரணி, பஞ்சமம், மந்தரம், அனுமந்தரம், பக்கசாரணி, பக்கபஞ்சமம், ஹெச்சுஸாரணி ஆகிய தந்திகளை கொண்ட வாத்தியம்
   1. தம்புரா 2. வீணை 3. வயலின் 4. கிற்றார்

9. "கண்ணன் குழல்வாரக் காக்கையை அழைத்தல்" எனும் பதிகத்தினை பாடியவர்
   1.சம்பந்தர் 2. ஆண்டாள் 3. பெரியாழ்வார் 4. துளசிதாஸர்

10. "பேசாதே நெஞ்சமே" எனும் முத்துத்தாண்டவரின் கீர்த்தனை அமைந்துள்ள இராகம்
    1. சூர்யகாந்தம் 2.காம்போதி 3.கோகிலப்ரியா 4. பவப்ரியா

11. புனித தியாகாஜஸ்வாமி கனவில் வந்து…எனும் பாடல்வரி இடம் பெறும் உருப்படி
    1. உள்ளமிரங்கி 2. முருகாஎனதாருயிரே 3. இனிநமக்கொரு 4. சிவபெருமானே

12. பின்வருவனவற்றுள் இராப்பண்கள்
    1. புறநீர்மை, பஞ்சமம் 2. சீகாமரம், கொல்லி
    3. செந்துருத்தி, செவ்வழி 4. கொல்லி, தக்கேசி

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

13. ருத்ர – மா என அழைக்கப்படும் இராகம்
1.கல்யாணி 2. தோடி 3. சங்கராபரணம் 4. கரஹரப்ரியா

14. இந்துஸ்தானி இசையில் காபி என அழைக்கப்படுவது
1. ஹரிகாம்போதி 2. மாயாமாளவகௌளை 3. தோடி 4. கரஹரப்ரியா

15. A. நவநீதம் ரி. ஆர்.. மகாலிங்கம் ரமணி ஆகியோரால் வாசிக்கப்பட்ட வாத்தியம்
**B.** ஆச்சா மரத்தினால் செய்யப்படும் வாத்தியம்
**C.** முகரந்திரம் தாரதந்திரம் என்பவற்றைக் கொண்ட வாத்தியம்
**D.** அணைசு கெண்டை எனும் பகுதிகளைக் கொண்ட வாத்தியம்

மேல் வரும் கூற்றுக்களுள் புல்லாங்குழலை குறிப்பது
1. A B 2. A C 3. B D 4. A D

16. பஜனைப்பத்ததியின் தந்தையான தாளப்பாக்கம் சின்னையா வாழ்ந்த காலம்
1. கி.பி. 15 ம் நூற்றாண்டு 2. கி. பி. 14 ம் நூற்றாண்டு
3. கி. பி. 7 ம் நூற்றாண்டு 4. கி.பி 8 ம் நூற்றாண்டு

17. ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப்படுவது
1. திருவாசகம், திருவிசைப்பா 2. திருவிசைப்பா, திருப்புராணம்
2. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 4. திருவிசைப்பா, திருமந்திரம்

18. தாளத்தின் 6 அங்கங்களும் அழைக்கப்படுவது
1. திரியாங்கம் 2. சோடசாங்கம் 3. அட்டாங்கம் 4 ஷடாங்கம்

19. ஜாதி பேதமற்ற அங்கங்கள்
1. அனுதுருதம், துருதம் 2. லகு, அனுதுருதம்
3. துருதம், லகு 4. லகு, துருதம், அனுதுருதம்

20. தோசநிவர்த்திக்குரிய இராகம்
1. தோடி 2. மத்தியமாவதி 3. கல்யாணி 4. கரஹரப்ரியா

21. தமிழ்ப்பதங்களின் நாயகன்
1. கண்ணன் 2. சிவன் 3. இராமர் 4. முருகன்

22. அர்த்தஜாமப் பூஜை முடித்து பள்ளியறைக்கென இசைக்கப்படும் இராகங்கள்
1. பூபாளம், பௌளி 2. ஆனந்தபைரவி, நீலாம்பரி
3. பௌளி, நீலாம்பரி 4. மோகனம், நீலாம்பரி

23. நந்தனார் சரித்திரம் என்ற இசை நாடகத்தினை எழுதியவர்
1. கோபாலகிருஸ்ணபாரதியார் 2. வேதநாயகம்பிள்ளை
3. முத்துத்தாண்டவர் 4. அருணாசலக்கவிராயர்

24. காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளையால் வாசிக்கப்பட்ட வாத்தியம்
1. புல்லாங்குழல் 2. வீணை 3.நாதஸ்வரம் 4. வயலின்

25. பாரசீகம் , அரேபியா போன்ற நாடுகளின் சங்கீதம் இந்திய சங்கீதத்தில் கலந்ததன் காரணமாக தோன்றிய இசை
1. இந்துஸ்தானிஇசை 2. கர்நாடக இசை 3. பண்ணிசை 4. நாட்டாரிசை

26. பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகளிற்கு மாத்திரம் சாகித்தியம் காணப்படும் வர்ணம்
1. பதவர்ணம் 2. ஆடவர்ணம் 3.பதஜதிவர்ணம் 4. தானவர்ணம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

27. வீணையில் தண்டித்தாங்கியாகவும் ஒலிபெருக்கும் சாதனமாகவும் பயன் படும் பகுதி
1. குடம் 2.பிருடைகள் 3. சுரைக்காய் 4. யாழிமுகம்

28. சொற்சுவை பொருட்சுவை இசைநுணுக்கம் எதுகை மோனை முதலிய தொடை நயங்களைக் கொண்ட பதங்களை இயற்றியவர்
1. முத்துத்தாண்டவர் 2. புரந்தரதாஸர் 3. தியாராஜர் 4. பாபநாசம்சிவன்

29. அகத்திணை மரபை வெளிப்படுத்தும் தேவாரங்கள்
1. காதலாகி, மானினேர்விழி
2. முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள், சிறையாரும் மடக்கிளியே
3. மாசில்வீணையும், சிறையாரும் மடக்கிளியே
4. அங்கமும் வேதமும், பண்டுநால்வருக்கு

30. கல்யாணி இராகத்தின் கானகாலம்
1. காலை 2. நண்பகல் 3. மதியம் 4. மாலை

31. நடன மண்டபம், தருக்க மண்டபம் என்பவை அமைக்கப்பட்டு சிற்பம், ஓவியம், நடனம் ஆகியன வளர்ச்சியடைந்த காலப்பகுதி
1. சோழர்காலம் 2. பாண்டியர்காலம் 3. பல்லவர்காலம் 4. சேரர்காலம்

32. * இவ் அடையாளம் குறிப்பது
1. அலைவுகோடு 2. அன்னியஸ்வரம் 3. ஏற்றஜாரு 4. ஆவர்த்தனமுடிவு

33. ஒரு அலங்காரத்தினை இரண்டாம் காலத்தில் பாடும் போது எடுத்துக் கொள்ளும் ஆவர்த்தனங்களின் எண்ணிக்கை
1. 10 2. 04 3. 06 4. 05

34. பன்னிரு திருமுறைகளை வகுத்து தொகுத்தவர்
1. இராஜஇராஜசோழன் 2. திருநாவுக்கரசர்
3. நம்பியாண்டார் நம்பி 4. மகேந்திரவர்மன்

35. திருத்தாண்டகம் பாடப்படும் இராகம்
1. ஹரஹரப்ரியா 2. ஹரிகாம்போதி 3. மத்தியமாவதி 4. மோஹனம்

36. பாஸாங்க இராகத்திற்கு உதாரணமாக அமைந்த பண்கள்
1.வியாழக்குறிஞ்சி , கௌசிகம் 2. செந்துருத்தி , செவ்வழி
3. பஞ்சமம் , புறநீர்மை 4. கொல்லி , சீகாமரம்

37. திருஞானசம்பந்தரால் சமணசமயத்திலிருந்து சைவசமயத்திற்கு மாற்றப்பட்ட மன்னன்
1. நின்றசீர்நெடுமாறன் 2. மகேந்திரவர்மன்
3. இராஜஇராஜசோழன் 4. இராஜேந்திரசோழன்

38. ஆதி காலத்தில் தமிழ் இசைக்கு பக்கவாத்தியங்களாக பயன்படுத்தப்பட்டவை
1. யாழ் , வீணை 2. யாழ் , குழல் 3. குழல் ,நாதஸ்வரம் 4. குழல் , வீணை

39. வக்ர இராகத்திற்கு உதாரணம்
1.மோகனம் 2. பிலஹரி 3. கமாஸ் 4. மத்தியமாவதி

40. மத்தியமாவதி இராகத்திற்குரிய பண்
1. இந்தளம் 2. பழம்பஞ்சுரம் 3. கொல்லி 4. செந்துருத்தி

Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# ஆண்டிறுதிப் பரீட்சை – 2019
# கர்நாடக சங்கீதம்

**தரம்: 10** **சுட்டெண்:.....................................** **நேரம்: 3 மணித்தியாலங்கள்**

பகுதி – 2

**முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் நான்கு வினாக்களுக்கும் விடை தருக**

1)
1. ஆ:- பதநிஸரிகமப
2. அ:- மகரிஸநிதப

   என்ற ஆரோகண அவரோகணத்தினை கொண்ட இராகம் எது?
3. முத்துத்தாண்டவர் வாழ்ந்த காலம் எது?
4. 35 தாளம் 175 தாளம் 108 தாளங்கள் அழியாது பாதுகாத்தவர் யார்?
5. ஊத்க்ருஹம், த்ருவம், மேளாபகம், ஆபோகம் எனும் அங்கங்கள் காணப்படும் உருப்படி?
6. உள்ளமிரங்கி எனும் கீர்த்தனையை இயற்றியவர்?
7. வீணை வாத்தியத்தில் சிறப்புற வாசிக்க கூடிய இசை வடிவம் எது?
8. திருநீலகண்டர் யாழ் வாசிக்கமுடியாது இடர்பட்ட தேவாரம் எது?
9. பண்ணியம் என்பது குறிக்கும் இராக வகை எது?
10. கோபாலகிருஸ்ணபாரதியாரால் இயற்றப்பட்ட இசை நாடகங்கள் இரண்டு தருக?
11. கல் நாதஸ்வரங்கள் காணப்படும் இடங்கள் எவை?

(1+1+1+1+1+1+1+2+2+=12 புள்ளிகள்)

2) கோபாலகிருஸ்ணபாரதியாரின் வாழ்கை வரலாற்றினை பின்வரும் விடயங்களை உள்ளடக்கி எழுதுக?
1. வாழ்க்கைக்காலம்
2. பிறந்த இடம்
3. பெற்றோர்
4. வாழ்க்கைச்சம்பவங்கள்
5. இசைப்பணி
6. இயற்றிய உருப்படிகள்
7. முத்திரை

(12 புள்ளிகள்)

3)
1. புல்லாங்குழலை வரைந்து பாகங்களை குறிப்பிடுக
2. இவ் வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக
3. இவ் வாத்தியத்தின் சிறப்புக்களை எழுதுக?
4. இவ் வாத்தியம் வாசிக்கும் முறையைத்தருக?
5. இவ் வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான்கள் இருவர் பெயர் தருக?

(12 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

4) 1. நாயகன் நாயகி பாவமாக அமைந்த உருப்படி எது?
2. இவ் உருப்படியின் இலட்சணத்தினை விளக்குக?
3. உதாரணங்கள் 2 தருக? இயற்றியவர் குறிப்பிடுக

(12 ள்ளிகள்)

5) பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக?

கல்யாணி

மத்தியமாவதி

தோடி

( மேள எண், ஆரோகணஅவரோகணம், ஸ்வரஸ்தானங்கள், விசேட அம்சங்கள், உருப்படிகள், சஞ்சாரம் குறிப்பிடல் வேண்டும் )

(12 புள்ளிகள்)

6) பின்வரும் பதங்களை விளக்குக
1. ஷடங்கம்
2. சபாகானம்
3. பாஷாங்கம்
( உதாரணங்கள் குறியீடுகள் எழுதுதல் வேண்டும் )

(3x4=12 புள்ளிகள்)

7) 1. திரியாங்கங்கள் எவை?
2. ஸப்ததாளங்கள் 35 தாளங்களாகும் முறையை விளக்கி துருவதாளத்தினை உதாரணம் தருக?

அல்லது

இந்தியாவின் 14 ம் 15 ம் நூற்றாண்டு பற்றி நீர் கற்ற விடயங்களை தொகுத்து எழுதுக?

(12 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk